வேலூர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2025

பத்தாம் வகுப்பு

சமூக அறிவியல் – விடை குறிப்பு

பகுதி – 1 14 X 1 = 14

வி.எண்		விடைகள்	மதிப்பெண்
1	இ	போப்	1
2	ஆ	1829	1
3	இ	பிபின் சந்திரபால்	1
4	இ	சீகன் பால்கு	1
5	ஆ	கூற்று தவறானது. ஆனால் காரணம் சரியானது	1
6	ஈ	கட்ச்	1
7	அ	5846 கி.மீ	1
8	அ	பெரியார்	1
9	அ	பருத்தி	1
10	ஆ	கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல	1
11	ஆ	1 & 2	1
12	ஈ	பாகிஸ்தான்	1
13	ஆ	தியோடோர் லெவிட்	1
14	இ	சென்னை	1

பகுதி – 2 10 X 2 = 20

வி.எண்	விடைகள்	மதிப்பெண்
15	i) எதிரிகளின் சுடுதலில் இருந்து காத்துகொள்வதற்காக தோண்டிய குழிகள். ii) இப்பதுங்கு குழிகளின் வழியாக உணவு, ஆயுதங்கள், புதிய வீரர்களும் வந்து சேர்வர்	2
16	i) சதி எனும் உடன் கட்டை ஏறுதல் ii) குழந்தைத் திருமணம் iii)பலதார மணம் iv)விதவை பெண்கள் மறுமணம் v)பெண்ணடிமைத்தனம்	2
17	i) 1927-சைமன் தலைமையிலான இக்குழுவில் இந்தியர்கள் எவரும் இடம்பெறாமல் அனைவரும் வெள்ளையர்களாக இடம் பெற்றிருந்தனர். ii)தங்கள் அரசியல் சாசனத்தை நிர்ணயிக்க தங்களுக்கு உரிமை இல்லாத நிலையைக் கண்டு ஆத்திரமடைந்த இந்தியர்கள் 'சைமனே திரும்பிப் போ' எனும் முழக்கத்துடன் எதிர்ப்பு தெரிவித்தன	2
18	டாக்டர். எஸ். தர்மம்பாள், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், நாகம்மை, கண்ணம்மா, நிலாவதி, ருக்மணி அம்மாள், அலர்மேல்மங்கை தாயம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆவர்.	2
19	i) வண்டல் மண். ii) கரிசல் மண் iii) செம்மண் iv) சரளை மண் v) உவர் மண்.	2
20	i) மும்பை ஹை எண்ணெய் வயல் ii)பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு iii)குஜராத் கடற்கரை iv)திக்பாய் எண்ணெய் வயல் v)பேஸ்ஸைம் எண்ணெய் வயல் vi) நாகார்காட்டியா எண்ணெய் வயல்	2
21	i) கிழக்கு - வங்காள விரிகுடா ii)வடக்கு - ஆந்திரப் பிரதேசம் iii)தெற்கு - இந்தியப் பெருங்கடல் iv)மேற்கு - கேரளா v) வடமேற்கு - கர்நாடகா	2

22	i) நகரங்களில் வாகன நெரிசலை குறைப்பதற்காக கொண்டு வரப்பட்டதாகும். ii) சென்னையில் மெட்ரோ இரயில்வே அமைப்பும், மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்து விரிவாக்கம் செய்து வருகிறது.	2
23	i) ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும். ii) ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அரசியலமைப்பே அச்சாணி ஆகும்.	2
24	i) கேபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள் ii) இராசாங்க அமைச்சர்கள் iii) இணை அமைச்சர்கள்	2
25	உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பை மதிப்பு கூட்டு முறை எனப்படுகிறது. டீ தூள் + பால் + சர்க்கரை = தேநீர்	2
26	i) நேர்முக வரிகள்: வருமான வரி, சொத்து வரி மற்றும் நிறுவன வரி ii) மறைமுக வரிகள்: முத்திரைத் தாள் வரி, பொழுதுபோக்கு வரி மற்றும் சுங்கத் தீர்வை வரி	2
27	i) தொழில் முனைவோர் என்பவர் புதிய சிந்தனைகளுக்கும்,வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார். ii) இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன்கள், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்	2
28	i) மாநிலங்களவை – 18 ii) மக்களவை – 39	2

பகுதி – 3 10 X 5 = 50

வி.எண்	விடைகள்	மதிப்பெண்
29	அ) பக்ருதின் தியாப்ஜி - மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டின் தலைவர் ஆ) மத்திய உயர் நிலங்கள் – மாளவப் பீடபூமி இ) நாமக்கல் - கொல்லி மலை ஈ) அடிப்படைகடமைகள் – 51A சட்டப்பிரிவு உ) வெளியுறவுக் கொள்கை – 51 சட்டப்பிரிவு	5
30	உலகம் இரு அணிகளாக பிரிதல் i)அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் தலைமையில் இரு அணியாக பிரிந்தது. ii) கம்யூனிசம் நாடுகள். கம்யூனிசம் அல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிந்தது அணு ஆயுதப் பரவல் i) இரு வல்லரசு நாடுகளும், உலகில் பல நாடுகளும் அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்தன. ii) பல நாடுகளில் ராணுவ செலவுகள் உச்சத்தை எட்டின பன்னாட்டு முகமைகள் உருவாக்கம் i) ஐ.நா.சபை, உலக வங்கி. பன்னாட்டு நிதியம் ஆகியவை உருவானது காலனி ஆதிக்க நீக்கம் உலகின் பல்வேறு காலனி நாடுகள் சுதந்திரம் பெற்றன அவ்வாறு சுதந்திரம் பெற்ற முதல் நாடு இந்தியாவாகும்.	5
31	i) தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தபோது இந்தியர்களின் சமூக உரிமைக்களுக்காக போராடினார். ii) டர்பன் ரயில் நிலையத்தில் நடந்த முதல் இனவெறி சம்பவத்தை எதிர்த்துப் போராட காந்தியடிகள் உறுதி பூண்டார்.	

iii) பீகாரில் உள்ள சம்பரான் பகுதியில் தீன் காதியா முறையை அகற்ற முதன்முதலாக போராடி வெற்றியை தேடித்தந்தார்.

iv)ரௌலட் சட்டம் மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் காந்தியடிகள் 1920 செப்டம்பரில் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கினார்.

v)1922 பிப்ரவரியில் பர்தோலியில் வரிகொடா இயக்கத்தை ஆரம்பித்தது. விவசாயிகள் மத்தியில் காந்தியடிகளை ஒரு தேசியத் தலைவராக உருமாற்றியது.

vi) சௌரி- சௌரா நிகழ்ச்சிக்குப்பின் காந்தியடிகள் காதி இயக்க மேம்பாடு, இந்து - முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை எதிர்ப்பு மீதும் கவனம் செலுத்தினார்.

vii) காங்கிரஸ் தொண்டர்கள் கதர் ஆடை உடுத்துவதை கட்டாயப்படுத்தினார். முழுமையான சுதந்திரம் அடைய காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்கி உப்பு மீதான வரியை ரத்து செய்ய கோரிக்கை விடுத்தது

viii) 1942 ஆகஸ்டு 18இல் காங்கிரஸ் மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றி செய் அல்லது செத்துமடி என்னும் முழக்கத்தை வெளியிட்டார்.

ix) காந்தியடிகளின் தலைமையில் அகிம்சை போராட்டம் அறவழியில் நடத்தி இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்று தருவோம் அல்லது நாம் நமது அடிமைத்தனத்தை காண உயிருடன் இருக்க மாட்டோம் எனக் காந்தியடிகள் கூறினார்.

x) இக்காரணிகளே காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்தது.

5 (ஏதேனும் ஐந்து)

32 அ (i)

வ.எண்	மேற்குத் தொடர்ச்சி மலைகள்	கிழக்கு தொடர்ச்சி மலைகள்
1.	இவை மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது.	இவை கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது.
2.	தொடர்ச்சியானது	தொடர்ச்சியற்றது
3.	இம்மலையின் வடபகுதி சயாத்ரி என்று அழைக்கப்படுகிறது.	இம்மலை பூர்வாதிரி என்று அழைக்கப்படுகிறது.

2 (ஏதேனும் இரண்டு)

அ (ii)

வ.எண்	தாமிரபரணி	காவிரி
1.	பொதிகை மலை முகடுகளில் உற்பத்தியாகிறது.	பிரம்மகிரி குன்றுகளில் தலைக்காவிரி என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது.
2.	இதன் துணை ஆறுகள் காரையாறு, பச்சையாறு, சிற்றாறு, இராமநதி, சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனா நதி	இதன் துணை ஆறுகள் பவானி, அமராவதி, நொய்யல்
3.	தென் இந்தியாவின் ஒரே வற்றாத நதியாக உள்ளது.	தென்னிந்தியாவின் தோட்டம் என் அழைக்கப்படுகிறது.

2 (ஏதேனும் இரண்டு)

ஆ

காரணம் கூறு :

பல இடங்களில் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

1

33

i) வ.உ.சிதம்பரனார். வி.சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோரால் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து நடத்தப்பட்டன.

ii) சுப்பிரமணிய பாரதியாரின் தேசபக்தி பாடல்கள் நாட்டு மக்களிடம் தேசிய உணர்வுகளை தட்டி எழுப்பின.

5 (ஏதேனும் ஐந்து)

	iii) சுதேசி இயக்கத்தில் மாணவர்களும், இளைஞர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். iv) சுதேசியை செயல்படுத்துவதில் துணிச்சலான நடவடிக்கைகளை வ.உ.சிதம்பரனார் சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் மூலம் மேற்கொண்டார். தூத்துக்குடியில் v)திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் நூற்பாலை தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சிதம்பரனார், சுப்ரமணிய சிவா ஆகிய இருவரும் தீவிரமாக பங்காற்றினார். vi) இதனால் தலைவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதை எதிர்த்து திருநெல்வேலியில் கலகம் வெடித்தது. vii) காவல் நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கரையாக்கப்பட்டன. viii) M.P.T.ஆச்சாரியா, V.V.சுப்ரமணியனார் மற்றும் T.S.S.ராஜன் போன்றோர் தமிழ்நாட்டைச் சேர்ந்த புரட்சிகர தேசியவாதிகளாவர். ix) புரட்சிகர செய்தித்தாள்களான இந்தியா, விஜயா, சூர்யோதயம் பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்தன.	
34	i) மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்கம், உத்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றன. ii) மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை, "இந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது. iii) தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன.இதனால் கோயம்புத்தூர் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது. iv) தமிழ்நாட்டில் உள்ள 435 நெசவாலைகளில் 200 நெசவாலைகள் கோயம்புத்தூர் பகுதியில் அமைந்துள்ளன. v) ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி. சேலம் மற்றும் விருதுநகர் ஆகியன மாநிலத்தின் பிற முக்கிய நெசவாலை நகரங்களாகும்.	5
35	i) வண்டல் மண் மண்ணின் பண்புகள்: வெளிர் நிறமுடைய மணற்பாங்கான மண் பரவல்: கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப் பள்ளத்தாக்குகள் ii) கரிசல் மண் மண்ணின் பண்புகள் :ஈரமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது. பரவல்: மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி iii) செம்மண் மண்ணின் பண்புகள்: மென் துகள்கள் குறிப்பிடப்பட்டுள்ள உப்புக் கரைசல்,வெண்களிப் பாறைத்தாதுக்கள், சிறு வெடிப்புகளுடன் கூடிய செம்மண் படிவு. பரவல்: தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் சோட்டா நாகபுரி பீடபூமி, ஜார்கண்ட் iv) சரளை மண் மண்ணின் பண்புகள்: உயரமான தாழ்வான பகுதிகளில் குறைந்த அளவும் உள்ளது.. மலைப் பகுதிகளில் அதிகமான அமிலத்தன்மையுடனும் பரவல் : மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகள், ஒடிசா மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் v) காடு மற்றும் மலை மண் மண்ணின் பண்புகள்: மென்மையான மணல் மற்றும் பாறை துகள்கள் கலந்து காணப்படுகிறது. பரவல்: ஜம்மு-காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம்	5 (ஏதேனும் ஐந்து)

	vi) உப்பு மற்றும் கார மண் மண்ணின் பண்புகள்: சிதைக்கப்படாத பாறைகள் மற்றும் சிதைவுற்ற கனிமங்களை உடையது. பரவல்: ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், பீகார்,	
36	அ) சாலைப்போக்குவரத்து : i)மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கிலோமீட்டர் ஆகும். ஆ) இரயில்வே போக்குவரத்து: i) தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது. ii) சென்னையில் புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் ஆகியவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. இ) வான்வழி போக்குவரத்து: i) தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. ii) சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியன சர்வதேச விமானநிலையங்கள் ஆகும். ஈ) நீர்வழி போக்குவரத்து: i) சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும்.	5
37	i) சமத்துவ உரிமை: பிரிவு 14- சட்டத்தின் முன் அனைவரும் சமம். ii) சுதந்திர உரிமை: பிரிவு 21 வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதுகாப்பு பெறும் உரிமை iii) சுரண்டலுக்கெதிரான உரிமை: பிரிவு 23 - கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல் iv) சமய சார்பு உரிமை: பிரிவு 25 - எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை. v) கல்வி, கலாச்சார உரிமை: பிரிவு 29 - சிறுபான்மையினரின் எழுத்து மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு vi) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை: பிரிவு 32 - தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது நீதிமன்றத்தை அணுகி உரிமையை பெறுதல்.	5 (ஏதேனும் ஐந்து)
38	i) 1961 "அணிசேரா இயக்கம்" என்ற சொல் 1953இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி. கிருஷ்ண மேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது. ii) இதன் நோக்கம் எந்த ராணுவக் கூட்டணியிலும் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும். iii) அணிசேராமை என்பது நடுநிலைமையாக இருப்பது என்பது பொருள் அல்ல; பிரச்சனைகளுக்கு முடிவுகளை நாடுகள் சுதந்திரமாகத் தீர்மானிப்பதாகும். iv) அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளராகவும் 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது. v) அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் இந்தியா - ஜவகர்லால் நேரு யுகோஸ்லாவியா - டிட்டோ	5

	எகிப்து - நாசர இந்தோனேசியா - சுகர்னோ கானா - குவாமே நிக்ரூமா	
39	அ) மொத்த நாட்டு உற்பத்தி (GNP) ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். இ) நிகரநாட்டு உற்பத்தி (NNP) மொத்தநாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும். ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும். உ) தலாவருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI) நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது. தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள்தொகை	5
40	i) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல். ii) துறை சார்ந்த சிறப்பு கவனம். iii) நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல். iv) புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி. v) பல்வேறு திறமையான தொழிலாளர்கள்.	5
41	1905 - வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம் 1906 - சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்ப ட்டது 1910 - தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல் 1912 - முதல் பால்கன் போர் 1914 – முதல் உலகப் போர் தொடக்கம் 1916 - தன்னாட் சி இயக்கம் / லக்னோ ஒப்பந்தம் 1917 - சம்பரான் சத்தியாகிரகம் / ரஷ்ய ப் புரட்சி 1918 - கேதா சத்தியாகிரகம் / முதல் உலகப் போர் முடிவு 1919 - ரௌலட் சட்டம் / ஜாலியன்வாலா பாக் படுகொலை / பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை 1920 - பன்னாட்டு சங்கம் தோற்றம் 1922 - சௌரி சௌரா சம்பவம் / முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு 1923 - சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம் 1927 - சைமன் குழு நியமனம் / வியட்நாம் தேசியக்கட்சி உதயம் 1928 - மோதிலால் நேரு அறிக்கை 1929 - லாகூர் காங்கிரஸ் மாநாடு / பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை	5 (ஏதேனும் ஐந்து)

	1930 - முதலாவது வட்டமேசை மாநாடு 1933 - ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல் 1934 - நீண்ட பயணம் 1935 - முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுப்பு / இந்திய அரசு சட்டம் 1939 - இரண்டாம் உலகப் போர் தொடக்கம் 1940 - பிரிட்டன் போர் / ஆகஸ்ட் நன்கொடை / தனி நபர் சத்தியாகிரகம்	
42	இந்திய வரைபடம் வரலாறு (கட்டாய விடை)  	5

பகுதி – 3 2 X 8 = 16

வி.எண்	விடைகள்	மதிப்பெண்
43 அ	கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கம் ஏற்பட்ட பகை : i) பாஞ்சாலங்குறிச்சியின். பாளையங்கலிருந்து பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் கட்டபொம்மன் பொறுப்பேற்றார். ii) வரிகளை வசூலிக்க ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியாளர்களை நியமித்தது. iii) ஆட்சியாளர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படைகளை பயன்படுத்தினர். iv) இதனை பாளையக்காரகளின் ஒருவரான கட்டபொம்மன் எதிர்த்தார். * v) இந்நிலையில் ஆங்கிலேய ஆட்சியாளர் ஜாக்சன் இராமநாதபுரத்திற்கு வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு ஆணை பிறப்பித்தார். vi) 1798 செப்டம்பர் 19 அன்று கட்டபொம்மன் ஜாக்சனை சந்தித்தார். இச்சந்திப்பில் கட்டபொம்மன் அவமானப்படுத்தப்பட்டதால் ஆங்கிலேயர்களுக்கும். கட்டபொம்மனுக்கும் மோதலாக மாறியது. vii) தான் அவமானப்படுத்தப்பட்டதை மதராஸ் ஆட்சிக்குழுவிடம் கட்டபொம்மன் தெரிவிக்கஜாக்சன் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். கட்டபொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பு : i) கட்டபொம்மனும் மருது சகோதரர்களும் சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்க்க திட்டம் தீட்டினர். ii) இந்நிலையில் கட்டபொம்மனை சரணடைய கோரி 1799 செப்டம்பர் 1ல் நிபந்தனை விதிக்கப்பட்டது. iii) கட்டபொம்மன் சரணடைய மறுக்கவே ஆங்கிலேய தளபதி பானர்மேன் தலைமையில்பாஞ்சாலங்குறிச்சி முற்றுகையிடப்பட்டது. * iv) கட்டபொம்மன் தப்பித்து புதுக்கோட்டை பகுதிக்கு சென்றார். அப்பகுதி மன்னர்கள் ஆங்கிலேய அரசுக்கு இணங்கி போனதால் கட்டபொம்மன் மறைந்திருந்த இடத்தை எளிதாக அறிந்து கைது செய்யப்பட்டார். v) விசாரணையின் போது கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொண்டார். vi) திருநெல்வெலிக்கு அருகேயுள்ள கயத்தாறின் பழையகோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.	8
	(அல்லது) தீபகற்ப ஆறுகள்	
43 ஆ	i) தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன. ii) பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. iii) தீபகற்ப ஆறுகளை அவை பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் : i) மகாநதி: இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கிறது. ii) கோதாவரி (விருத்தகங்கா):மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. iii) கிருஷ்ணா: மகாராஷ்ட்டிரா மாநிலத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் ஊற்றாக	

	உருவாகிறது. iv) காவிரி: கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவேரியில் உற்பத்தியாகிறது. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் : i) நர்மதை: ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாகி காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது ii) தபதி: காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது	
44 அ	இந்திய வரைபடம் (புவியியல்) இணைக்கப்பட்டுள்ளது (அல்லது)	8
ஆ	தமிழ்நாடு வரைபடம் (புவியியல்) இணைக்கப்பட்டுள்ளது	

F4 (அ)


INDIA - OUTLINE
(7) K2 சிகரம்
1. தார் பாலைவனம்
8. டார்ஜிலிங்
(5) மீனாஸ் உயிர்க்கோளு மெட்டகம்
(6) கும்பை வைரு
(4) சென்னை (சர்வதேச விமான நிலையம்)
3 - கரிசல்மண் பகுதி
(2) - வடகிழக்குப் பருவக்காற்று வீசும் திசை
Scale 1 17,000,000 1cm = 170 kms
Lambert Conical Orthomorphic Projection

44.(இ)


TAMIL NADU
(2) ஜெவ்வாதுமலை
(3) தொட்டபெட்டா
(4) திருச்சி
(7) தூத்துக்குடி
துறைமுகம் மன்னார்
வளைகுடா
6. நெல் விளையும்
பகுதி